DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.10

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சிவலிங்கம் | Caste: | |
| Father's Name: | சிவன்காளை | Calling: | கிராம நிர்வாக அலுவலர் |
| Village: | கள்ளபட்டி | Religion: | |
| Taluk: | உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 14.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது கமுதி தாலுகா பாக்குபட்டி கிராம குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சா.ப.சா.6 உக்கிரபாண்டி எனக்கு கீழ் பணிபுரியும் கிராம உதவியாளர். ஆஜர்படுத்தப்பட்ட எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. மீண்டும் சாட்சியிடம் வலியுறுத்தி கேட்டபோது பார்த்ததாக ஞாபகமில்லை என கூறுகிறார். கடந்த 03.02.2024ம் தேதி எந்த கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் பாக்குபட்டி கிராம குரூப் நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அந்த தேதியில் வேறு கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பில் இருந்தேனா என்றால் கமுதி மெயின் குரூப் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள 4 கையெழுத்துகளும் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை எங்கு வைத்து போட்டேன் என்றால் கமுதி காவல்நிலையத்தில் வைத்து மேற்படி காவல்நிலைய ஆய்வாளர் குருநாதன் கேட்டுக்கொண்டதால் போட்டேன்.

அந்த கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.8**. கடந்த 03.02.2024ம் தேதி நான் பாக்குபட்டி கிராமத்தில் பணியில் இருந்தபோது கமுதி வட்டாட்சியர் சேதுராமன் என்னை போனில் அழைத்து கமுதி காவல்நிலையம் சென்று கமுதி காவல்நிலைய ஆய்வாளரை பார்க்கும்படி சொன்னார். வட்டாட்சியர் என்னை போனில் அழைத்தபோது மாலை 6–6.15 இருக்கும். நானும் என் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் மாலை 6.45 –7.15 மணியளவில் கமுதி காவல்நிலையம் சென்று காவல் ஆய்வாளரை சந்தித்தோம். காவல் ஆய்வாளரிடம் என்னை வட்டாட்சியர் சந்திக்க சொன்னார். என்ன விவரம் என கேட்டபோது மூன்று நபர்களை ஒரு கற்பழிப்பு சம்பந்தமாக கைது செய்துள்ளதாகவும், அவர்களிடமிருந்து அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் எடுக்கப்பட்டதாகவும், அவர்களிடமிருந்து 3 கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் சொன்னார். அங்கு தயாரிக்கப்பட்டிருந்த மகசரில், சாட்சி கையெழுத்து போடும்படி சொன்னார். நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் போடமுடியாது என கூறினோம். உடனே காவல் ஆய்வாளர் வட்டாட்சியருக்கு போன் செய்து வட்டாட்சியர் எனது போனுக்கு வந்தார். வட்டாட்சியர் எனக்கு போனில் அதிகாரிகள் கேட்பதை செய்துகொடுங்கள் என்று சொன்னார். அதன்பிறகு காவல் ஆய்வாளர் வற்புறுத்தியதால் கையெழுத்து போட்டோம். இதுசம்பந்தமாக என்னை காவல்துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் நேற்று விசாரித்தார். 2024ம் ஆண்டில் விசாரித்தாரா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் 03.02.2024ம் தேதி விசாரித்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 03.02.2024ம் தேதி என்னை விசாரிக்கும்போது எதிரிகளை தெரியும் என சொன்னேன் என்றால் கடந்த 03.02.2024ம் தேதி காலை கமுதி காவல் வட்ட ஆய்வாளர் என்னை போனில் கூப்பிட்டார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் காலை 9.00 மணியளவில் அரக்காசு அம்மன் கோவிலுக்கு சென்றோமா என்றால் இல்லை. அங்கு 1ம் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரன் அங்கு இருந்தார் என்றால் நான் செல்லவில்லை. நான் அங்கு சென்றேன் என்றும், அங்கு என் முன்னிலையிலும், கிராம உதவியார் முன்னிலையிலும் 1ம் எதிரியை விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தா் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காலை 10.30 மணிக்கு நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9. அந்த கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த கையெழுத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போடவில்லை என்றும் கமுதியில் உள்ள அரக்காசு அம்மன் கோவிலில் வைத்து போட்டோம் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி 2கி கஞ்சாவை எடுத்து ஆஜர்படுத்தினார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிரியிடம்

இருந்து கைப்பற்றப்பட்ட 2 கி கஞ்சாவில் இருந்து தலா 50 கிராம் எடையுள்ள இரண்டு மாதிரிகள் தனித்தனியாக காக்கி கவரில் எங்கள் முன்னிலையில் எடுத்தார்கள் என்றால் சரியல்ல. மீதமுள்ள 1.900 கி எடையுள்ள கஞ்சாவை ஒரு பேப்பரில் சுற்றி நூல் வைத்து கட்டி எங்கள் முன்னிலையில் சீல் வைத்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடம் இருந்த TN 61 V 9369 YAMAHA R15 என்ற மோட்டார் சைக்கிளை 10.45 மணியளவில் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றும்போது ஆய்வாளர் ஒரு மகசர் தயார் செய்தார் என்றும், அந்த மகசரில் நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அதுமட்டுமல்லாமல் 1ம் எதிரி தனது பாக்கெட்டில் இருந்து NOTHING என்ற கருப்பு கலர் செல்போன் மற்றும் ருபாய் 500/- எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார் என்றும் அதை நாங்களும் பார்த்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றும்போது ஆய்வாளர் காலை 11.00 மணியளவில் ஒரு மகசர் தயார் செய்தார் என்றும் அந்த மகசரில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அதே இடத்தில் 2ம் எதிரி பாலமுருகன் என்ற பாலகுமாரை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்திற்கே செல்லவில்லை. அவ்வாறு விசாரிக்கும்போது 2ம் எதிரி பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டகுமார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தாமாக முன்வந்து கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 11.15-12.15 மணியளவில் ஆய்வாளர் எழுதினார் என்றும், அதற்கு சாட்சியாக நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. 2ம் எதிரியும், தன்னிடமிருந்த 1 ¼ கி எடையுள்ள கஞ்சாவை எடுத்து

ஆய்வாளரிடம் எங்கள் முன்னிலையில் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. அதிலிருந்து தலா 50 கிராம் எடையுள்ள கஞ்சாவை தனியாக பகுப்பாய்வுக்காக ஆய்வாளர் எடுத்தார் என்றும் அதையும் நாங்கள் பார்த்தோம் என்றால் சரியல்ல. மீதமுள்ள 1.150 கி எடையுள்ள கஞ்சாவை பேப்பரில் சுற்றி கயிற்றால் கட்டி சீல் வைத்தார் என்றும், அதையும் நா்னும் கிராம உதவியாளரும் பார்த்தோம் என்றால் சரியல்ல. அப்போது காவல் ஆய்வாளர் ஒரு மகசர் தயார் செய்தார் என்றும் அதில் நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. மேலும் மேற்படி அஜித் என்ற விக்னேஷ்வரன், பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டக்குமார் ஆகிய இருவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்கள் மறைத்து வைத்திருப்பதாக சொன்ன கத்திகளை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1,2 எதிரிகளையும் எங்களையும் நீராவி கரிசல்குளம் சுடுகாட்டிற்கு அழைத்து சென்றார்கள் என்றும் அங்கு 1,2 எதிரிகள் பக்கத்தில் இருந்த காட்டு கருவேல் மரத்தில் ஒளித்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த இரு கத்திகளையும் மதியம் 1.15 மணியளவில் ஆய்வாளர் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியன் முன்னிலையிலும் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. 1,2 எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த கத்திகளை தற்போதும் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும் ஆனால் எதிரிகளுக்கு பயந்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. கத்திகளை கைப்பற்றும்போது மகசர் தயார் செய்தார்கள் என்றும் அந்த மகசர்களில் நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் கையெழுத்து செய்தோம்

என்றால் சரியல்ல. 1,2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்களில் 3 வது எதிரி குறித்து தகவல் சொன்னார்கள் என்றும், அதனடிப்படையில் 3 ம் எதிரி கமுதி பசும்பொன் நடுத்தெருவைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் சூர்யா என்பது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 3 ம் எதிரியை 03.02.2024 ம் தேதி மாலை 4.30 மணியளவில் பசும்பொன் வெள்ளைச்சாமி தேவர் நினைவு மண்டபம் அருகில் உள்ள ஊரணியில் வைத்து ஆய்வாளர் கைது செய்தார் என்றும், அவரை ஆய்வாளர் விசாரித்தபோது அவரும் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமுலம் எங்கள் முன்னிலையில் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டியனும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 3 வது எதிரிக்கு கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது அந்த கையெழுத்து அ.சா.ஆ.10. 3 ம்எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் தன் வீட்டிற்கு அழைத்து சென்று ஒரு கத்தியை எடுத்து எஙகள் முன்னிலையில் ஆஜர் செய்தார் என்றால் சரியல்ல. அவர் ஆஜர் செய்த கத்தியை ஒரு மகசர் தயார் செய்து ஆய்வாளர் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் கைப்பற்றி மகசரில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த மகசரில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் ஏற்கனவே அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. (3 ம் எதிரியிடம் இருந்தது கைப்பற்றியதாக சொல்லப்படும் கத்தியை கைப்பற்றியபோது தயார் செய்த மகசர் ) . 1,2 எதிரிகள் மீது 30 க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளதாலும், அவர்கள் சரித்திர பதிவேடு குற்றவாளிகளாக உள்ளதாலும் 03.02.2024 ம் தேதி ஆய்வாளர் அழைத்ததன் பேரில் கமுதி அரக்காசு

அம்மன் கோவிலுக்கு சென்று எதிரிகளை கைது செய்யவும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றவும், கைப்பற்றிய இடத்தில் வைத்து வழக்கு ஆவணங்களை அதற்கு ஆதரவாக மகசரிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து செய்துவிட்டு வழக்கு சம்பந்தப்பட்ட கத்திகள் நீராவி கரிசல் குளம் சுடுகாட்டிற்கு பின்பு கைப்பற்றியதற்கு ஆதரவாக அத்தாட்சியில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் செல்போனை இதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் உள்ள செல்போன் என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதால் அதுகுறித்து தெரியும் என்றும் ஆனால் தற்போது எதிரிகளுக்கு பயந்து தெரியவில்லை, பார்க்கவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கமுதி மெயின் குரூப்பிற்கு தனியாக தலையாரி உள்ளாரா என்றால் சரிதான். கமுதி காவல்நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்யும்போதுதான் என்னுடைய தலையாரியும் கையெழுதது செய்தார் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி** – நான் கிராம அலுவலர் என்ற முறையில் சாதிச் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் , வருமான சான்றிதழ், OBC சான்றிதழ், விதவை சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ், பட்டா மாறுதல், வாரிசு சான்றிதழ் கொடுப்பதற்கு அதிகாரம் உண்டு. நான் கொடுக்கும் சான்றிதழ்களை உண்மையென நம்பி அரசாங்கம் தீட்டும் நலதிட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்குவார்கள் என்றால் சரிதான். என்னுடைய கிராமத்தில் வசிக்கும் ஒரு நபர் நல்லவரா கெட்டவரா என நான் வழங்கும்

சான்றிதழின் அடிப்படையில் அரசாங்கம் அல்லது வேறு துறையை சார்ந்தவர்கள் என்னுடைய சான்றிதழுக்கு மதிப்பு கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதனால் நான் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு முறையாக விசாரணை செய்யாமல் எந்தவொரு சான்றிதழும் வழங்க மாட்டேன் என்றால் சரிதான். அதேபோல் போலிசாரோ வேறு யாரோ வலியுறுத்தி கேட்டுக்கொண்டால் கையெழுத்து போடுவேனா என்றால் போடமாட்டேன்.

அரசு தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.

1 முதல் 3 எதிரிகள் முக்குலத்தோர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது . நான் என்ன சமூகத்தை சேர்ந்தவர் என்றால் பிரமலை கள்ளர் . என்னுடைய சாதியும் முக்குலத்தோர் சமூகத்தை சேர்நத்து என்றால் சரிதான். எதிரிகள் முக்குலத்தோர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.11

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர் அபிஷேகா மேரி | Caste: | |
| Father's Name: | சமாதானம் | Calling: | மருத்துவர் |
| Village: | செம்மனும்பொட்டல் | Religion: | |
| Taluk: | மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் | Age: | 29 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 14.07.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் பெண்ணியல் துறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 23.10.2023 முதல் 23.10.2024 காலகட்டத்தில் இராமநாதபுரம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் பெண்ணியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தேன். கடந்த 01.02.2024 ம் தேதி காலை 6.22 மணிக்கு நான் பணியில் இருந்தபோது கமுதி காவல்நிலைய பெண் தலைமை காவலர் 1058 திருமதி அன்னபூரணம், பெண் மு.நி.கா.480 திருமதி. முத்துமாரி ஆகிய இருவரும் கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 சட்டபிரிவுகள் 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC வழக்கில் பாதிக்கப்பட்ட தாமரை செல்வி , வயது 28 என்பரின் மருத்துவ பரிசோதனைக்காக ஆஜர்படுத்தினார்கள். தாமரை செல்வியை நான் விசாரித்தபோது அவர் தன்னை முன்பின் தெரியாத இரண்டு ஆண்கள் கட்டாயப்படுத்தி பாலியல் வன்புணர்வுக்கு 29.01.2024

மதியம் 12.30 மணியளவில் இடைச்சியூரணி விலக்கு அருகில் உட்படுத்தப்பட்டதாக கூறினார். மேலும் அவரின் ஒப்புதலோடு பரிசோதனை மேற்கொண்டதில் மார்பக பகுதியிலும் பிறப்புறுப்பின் உட்புறம் மற்றும் வெளிப்புறப் பகுதிகளில் காயங்கள் எதுவும் இல்லை. தாமரை செல்வியிடம் இருந்து எடுக்கப்பட்ட Vaginal Smear and Swab, Cervical Smear and Swab, மற்றும் இரத்தம் ஆகியவற்றை எடுத்து ஆய்வகத்தில் சேகரித்து வைத்தேன். பின்னர் தாமரை செல்வியிடமிருந்து எடுக்கப்பட்ட தடயங்களை இரசாயன பரிசோதனைக்கு இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைக்கப்பெற்ற பகுப்பாய்வில் விந்து மற்றும் விந்தணுக்கள் கண்டறியப்படவில்லை என அறிக்கை கிடைக்கப்பட்டது. அதனடிப்படையில் இறுதி அறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய இறுதி அறிக்கை **அ.சா.ஆ.11**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>1– ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

பலாத்காரமான உடலுறவு செய்தால் மார்பு, கன்னம், பிறப்புறுப்பு பகுதியில் காயங்கள் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நான் பரிசோதனை செய்த பெண் ஏற்கனவே உடலுறவு மேற்கொண்ட நபர் என்றால் சரிதான். அவர் தனக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாக சொன்னார். அதனால் Hymen Intact ஆக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். உடலுறவுக்கு பின் பிறப்புறுப்பில் விந்து 3,4 நாட்கள் வரை இருக்கும் என்றால் என்னிடம் வரும்போது 48 மணி நேரங்கள் கழித்து வந்ததால் அதற்கு முன்பு குளித்திருந்தாலோ சுத்தம் செய்திருந்தாலோ விந்துக்கள் இருக்க வாய்ப்பில்லை. பொதுவாக

உடலுறவிற்கு பின்பு குளிக்கவில்லை என்றாலோ சுத்தம் செய்யவில்லை என்றாலோ விந்து 3,4 நாட்கள் வரை இருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

**2–ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் செய்த குறுக்கு விசாரணையை ஏற்று கொண்டதால் 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியும் தனியாக குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)